NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 12 July 2022

# லாப நோக்கமற்ற அமைப்புகளை நிறுவி, நடத்திவரும் சிங்கப்பூர் மாணவர்கள் இருவருக்கு அனைத்துலக விருது

வசதிகுறைந்தோருக்கு உதவும் லாப நோக்கமற்ற அமைப்புகளை நிறுவி நடத்திவரும் சிங்கப்பூர் மாணவர்கள் இருவருக்கு அனைத்துலக டயானா விருது வழங்கப்பட்டுள்ளது.

யேல்-என்யுஎஸ் பல்கலைக்கழகத்தில் அண்மையில் பட்டம்பெற்ற 23 வயது நூர் ஹசீம் அப்துல் நாசர், அனைத்துலகப் பள்ளியான நேஷனல் பப்ளிக் ஸ்கூலில் பயிலும் 16 வயது மாணவி அனன்யா ராவ் இருவரும் இம்மாதம் 1ஆம் தேதி காணொளி மூலம் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

காலஞ்சென்ற பிரிட்டிஷ் இளவரசி டயானாவின் நினைவாக வழங்கப்படும் இந்த விருது, சமூகசேவையில் தங்கள் தலைமுறையினருக்கு ஆர்வமூட்டி, ஊக்கமளிக்கும் ஒன்பது முதல் 25 வயது வரையிலானோரை அங்கீகரிக்கிறது.

ஹசீம், அனன்யா உள்பட 29 நாடுகளைச் சேர்ந்த 180 இளையர்கள் இந்த விருதைப் பெற்றுக் கொண்டனர்.






**படங்கள்: த சிங்போஸ்ட் புரோஜெக்ட், அனன்யா ராவ்.**

அனன்யா 2020ஆம் ஆண்டு ‘ஆர்ட்: கனெக்ட்’ என்ற முயற்சியைத் தொடங்கினார். சிங்கப்பூரின் மாணவ ஓவியர்களை சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களில் உள்ள நோயாளிகளுடன் தொடர்பு கொள்ளச் செய்யும் திட்டம் இது.

தற்போது வெவ்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 40க்கும் அதிகமான தொண்டூழியர்கள் இதில் இணைந்துள்ளனர். முதியோர் பராமரிப்பு இல்லங்களில் உள்ளவர்களுடன் இணையம்வழி நட்பு ஏற்படுத்திக்கொள்வது, கைவினைப் பயிலரங்குகள் நடத்துவது போன்றவற்றில் இவர்கள் ஈடுபடுகின்றனர்.

உடல் உறுப்பு தானம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் தேசியப் பல்கலைக்கழக உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை நிலையத்துடன் இணைந்து ஓவியப் போட்டியையும் இந்த அமைப்பு நடத்தியது.

ஹசீம் 2019ல் ‘த சிங்போஸ்ட் புரோஜெக்ட்’ எனும் முயற்சியைத் தொடங்கினார்.

‘டிஷ்யு பேப்பர்’ எனப்படும் மெல்லிழைத் தாள் பொட்டலங்களை விற்கும் முதியோர் மீதான குறைகூறலுக்கு எதிரான சமூக ஊடகப் பிரசாரம் இது. விழிப்புணர்வு ஏற்படுத்துவது மட்டுமின்றி இவர்களையும், பழைய அட்டைப் பெட்டிகளைச் சேகரிக்கும் முதியோரையும் உரிய சமூகசேவை அமைப்புகளுடன் தொடர்புபடுத்துவதிலும் இந்தத் திட்டம் முனைந்துள்ளது.

சமூகத்தில் தாக்கம் ஏற்படுத்துவது ஒரு சிக்கலான, கடினமான பயணம் என்றாலும் இத்தகைய விருதுகள் அதற்கான அங்கீகாரத்தை வழங்குவதாக ஹசீம் குறிப்பிட்டார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.